Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 62/2025

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –4**

| | | | |
|---|---|---|---|
| Name: | ரமேஷ் | Calling: | மெக்கானிக் |
| Father's Name: | சுப்ரமணி | Religion: | |
| Village: | நேதாஜீ நகர் | Age: | 41 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 13.11.2025 நேரம் : 12.15 PM

(எதிரி ஆஜர் )

அ.சா.4 முதன்மை விசாரணை

நான் நேதாஜீ நகரில் குடியிருந்து மெக்கானிக் வேலை செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சிக்கையொப்பம் என்னுடையது. கடந்த 20.01.2025 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நியூடவுன் பஸ் ஸ்டாப் அருகே பேருந்து அங்கு நின்ற போது ஏதோ திருடு போனதாக சொல்லி போலிசார் அங்கு வந்து பார்த்து வரைப்படம் போட்டார்கள் அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன். **பார்வை மகசர் அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னிடம் பெயர் , முகவரி , தொலைபேசி எண் ஆகியவற்றை கேட்டு குறிப்பெடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். குறிப்பெடுத்த தாளில் தான் என்னை கையொப்பம் செய்ய சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த கையொப்பம் தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட கையொப்பம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ரமேஷ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.14 10:32:05 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 62/2025

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –5**

| Name: | ஹரிஷ் | Calling: | டுவிலர் பார்கிங் வேலை |
|---|---|---|---|
| Father's Name: | சங்கர் | Religion: | |
| Village: | கணவாய்புதூர் | Age: | 23 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 13.11.2025 நேரம் : 12.20 PM

(எதிரி ஆஜர் )

அ.சா.5 முதன்மை விசாரணை

நான் கணவாய்புதூர் நகரில் குடியிருந்து டுவிலர் பார்கிங் வேலை வேலை செய்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சிக்கையொப்பம் என்னுடையது. கடந்த 23.01.2025 ம் தேதி பகல் நேரத்தில் நியூடவுன் பைபாஸ் அருகே பேருந்தில் நகை திருடு போனதாக சொல்லி போலிசார் அங்கு வந்து பார்த்து விசாரித்தார்கள். அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் கூறும் வாகனம் நிறுத்தும் இடமானது (பார்கிங் ) நியூடவுன் பஸ் நிறுத்ததிற்கு அருகில் உள்ள இடம் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் பெயர் , முகவரி , தொலைபேசி எண் ஆகியவற்றை கேட்டு குறிப்பெடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். குறிப்பெடுத்த தாளில் தான் என்னை கையொப்பம் செய்ய சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த கையொப்பம் தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட கையொப்பம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ஹரிஷ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.14 10:32:11 +0530